1974 மார்ச் 29]

திரு. என். மாணிக்கம் : தலைவர் அவர்களே, ஒகேனக்கல் சுற்றுலா மாளிகைக்குச் செல்லும் வழியில் சின்னாறு என்னும் காட்டாறு இருக்கிறது. அதைக் கடந்து செல்லவேண்டியிருப்பதால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒகேனக்கல்லை எளிதில் அடைவதற்கு வகை செய்யும்பொருட்டு ஒகேனக்கல் அருகே சின்னாற்றின் குறுக்கே ஐந்து லட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பாலமொன்று கட்டுவதற்கு பொது (சுற்றுலா) துறையின் 1973 சனவரித் திங்கள் 24ஆம் நாளிட்ட 253-ஆம் ஆணையில் அரசு ஒப்பளிப்பு வழங்கி உள்ளது. அதை விரைவில் கட்ட முயற்சி எடுக்கப்படும்.

Chola Art Gallery

*666 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Chola Art Gallery put up by the Archaeological Survey of India, has been opened in January 1974 at Sri Brahadeeswarar Temple in Thanjavur ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை பெரிய கோயிலின் தெற்கு பிரகாரத்தில் இந்நாட்டவரும் வெளிநாட்டவரும் கண்டுகளிக்கும் வண்ணம் சோழர் காலத்துக் கலைத் திறமையை விளக்கும் ஒரு கலைக்கூடம் இந்திய தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் நிரந்தரமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கோயிலின் உள் பிரகாரத்தின் சுவர்களில் உள்ள சோழர்களின் விலை மதிக்க முடியாத ஓவியங்களும் பரத நாட்டிய சிற்பங்களும் வண்ணப் புகைப் படங்களாக எடுக்கப்பட்டு பெரிதாக்கப்பட்டு ஒளி வெள்ளத்தில் வைக்கப் பட்டுள்ளன. பெரிய கோயிலில் மற்றும் ஏனைய இடங்களிலுள்ள சோழர்களின் கட்டடக் கலை, சிற்பங்கள் மற்றும் வெண்கலச் சிலைகள் முதலியவற்றை ஒப்பு நோக்குமுகத்தான் அவைகள் பெரிதாக்கப்பட்ட புகைப்படங்களாக எடுக்கப்பட்டு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : சார், தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் பழைய கிரந்தங்கள், சுக்ர நாடி சாஸ்திரம் போன்ற பல சாஸ்திர நூல்கள் இருக்கின்றன. அவற்றை இந்த ஸ்தாபனம் பாதுகாக்கிறதா ? சர்க்கார்........

[1974 மார்ச் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துணைக் கேள்வி, மூலக் கேள்வியிலிருந்து எப்படி எழ முடியும் ? எழாது. திரு. பாலசுந்தரம் அவர்கள் இப்போழுது கேள்வி கேட்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் மேல் மாடத்தில் இருக்கிற ஓவியங்கள் உயிரோவியங்களாக காட்சி தந்துகொண்டிருக்கின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தீட்டப்பட்ட அந்த ஓவியங்களை அயல் நாட்டார் சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அது ஒரு குறையாகவே தென்படுகிறது. எனவே, அயல்நாட்டார் மேலே சென்று அந்த ஓவியங்களைப் பார்த்து மகிழ நம் அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா .நெடுஞ்செழியன் : அந்தக் குறையைப் போக்குவதற்காகத்தான் இந்தக் கலைக்கூடம் நிறுவப்பட்டிருக்கிறது. அந்த ஓவியங்களை எல்லாம் வண்ணப்படங்களாக எடுத்து ஒளி விளக்கு போட்டுக் காட்டும் அளவிற்கு மற்றவர்கள் காணும் வகையில் இருக்கவேண்டும் என்பதால், இந்துக்கள் அல்லாத மற்றவர்கள் சந்நிதிக்கு உள்ளே போவதற்கும் மேல் மாடத்தில் ஏறுவதற்கும் கோவில் வழிபடுபவர்கள் இடம் அளிக்க முன்வராததால், மறுப்பதால், மேல் நாட்டார் அந்த ஓவியங்களைக் கண்டு களிக்க வண்ணப்படங்கள் எடுத்துக் கலைக்கூடத்தில் வைத்து காட்சிப் பொருள்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன் : பிரகதீஸ்வரர் ஆலயம் தமிழர்களின் வரலாற்றுப் பின்னணியில் அமைந்த சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்ருகும். டெல்லி செங்கோட்டையில் ஸவுண்ட் அன்ட் லைட் என்ற முறையில் செங்கோட்டை வரலாற்றினை மிக அழகாக எடுத்துச் சொல்வதுபோல் பிரகதீஸ்வரர் ஆலயத்திலும் அந்த ஒலி-ஒளி முறையில் தமிழ் நாட்டினுடைய சிபுப்பு மிக்க வரலாற்றினை எடுத்துச் சொல்வதற்கான வழிவகையை இந்த அரசு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை. மதுரைக் கோவிலில் அப்படிச் செய்யலாம் என்ற முயற்சி இருந்தது. அது மதுரையில் செய்யலாமா அல்லது மகாபலிபுரத்தில் செய்யலாமா என்ற அளவிற்கு வந்து மத்திய அரசு சுற்றுலாத் துறை மகாபலிபுரத்தில் செய்யலாம் என்ற அளவிற்கு எண்ணத்தை வைத்து அந்நிய நாட்டு நிறுவனத்தாரோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறுர்கள். மகாபலிபுரத்தில் வைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. தஞ்சைக் கோயிலில் வைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. த. சோனையா : தஞ்சையில் சோழர் கலைக்கூடம் அமைந்திருப்பதைப் போல் மதுரை மாநகரில் பாண்டியன் கலைக்கூடம் என்று மதுரை மீனட்சி அம்மன் கோவிலில் ஒரு கலைக்கூடம் அமைக்க அரசு முன்வருமா ?

1974 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே அந்தக் கோவிலில் ஒரு கலைக்கூடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எதிர் காலத்தில் அதை மிகச் சிறந்த வகையில் வைப்பதற்கு இப்போது திருமலைநாயக்கர் மகால் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. அது புதுப்பிக்கப் பட்ட பிறகு தென் மண்டபத்திலுள்ள பல்வேறு கலைப்பொருள்களைத் திரட்டி வைத்து சிறந்த கலைக்கூடம் ஆக்கவேண்டும் என்ற எண்ணம் தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினருக்கு இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த பிரகதீஸ்வரர் கோவிலில் உள்ள ஓவியங்கள் எல்லாம் எட்டு அல்லது பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த சோழர் காலத்தில் உள்ளவையாயிற்றே. அந்த ஓவியங்களின் மேல் நாயக்கர் காலத்தில் சில ஓவியங்கள் மேலே பூசப்பட்டு மாற்றப்பட்டி ருக்கின்றன என்று சொல்கிறார்களே, அப்படியானால் முன்னால் இருந்த அந்த ஓவியங்கள் தெளிவாகத் தெரிவதற்கு என்ன ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் சோழர் காலத்து ஓவியங்கள்தான் வரையப்பட்டிருந்தன. பின்னர் நாயக்கர் காலத்தில் பூசப்பட்டு வேறு ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன என்று வல்லுனர்கள் கண்டறிந்த பிறகு உள்ளே சோழர் காலத்து ஓவியங்கள் தென்பட்டன. அதைப் பாதுகாக்க அந்த ஓவியங்கள் பழுதுபடாமல் இருக்கவும் வண்ணங்கள் குறையாமல் இருக்க வும் தக்க முயற்சிகளை எல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதன் வண்ணப்படங்கள்தான் இந்தக் கலைக்கூடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். கே. கோவிந்தசாமி என்பவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக இருந்தார்கள். அவர்கள்தான் முதன்முதலாக சோழர் காலத்து ஓவியங்களைக் கண்டறிந்தவர்.

மத்திய அரசின் கீழுள்ள கோயில்கள்

*667 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மத்திய அரசால் பராமரிக்கப்பட்டுவரும் ஆலயங் கள் எவை, எவை ?

(இ) இவற்றில் பல பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன ?